# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

தேதி: 18.04.2026

OS. No. 26/2023

வழக்கு சாட்சி DW.1– சசிகலா , க/பெ. தியாகராஜன்

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

வழக்கு தாவா சொத்து ஆதியில் சர்வே எண் .103/17 என்று முகமது உசேன் என்பவருக்கு பட்டா எண்.378 என்று பாத்தியப்பட்டு இருந்தது என்றால் சரிதான். முகமது உசேன் என்பவர் 05.12.1989 ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான் . அவர் இறந்தபிறகு முகமது உசேனின் வாரிசுகளான மனைவி உம்சால் பீவி , அவரது மகள்கள் மும்தாஜ் பேகம் , அம்சத் பேகம் , மகன் அப்துல் அஜிஸ் ஆகியோர்களுக்கு சொத்து இறங்குரிமையின்பேரில் கிடைக்கப்பெற்று உடைமையில் இருந்தார் என்றால் சரியல்ல . மேற்சொன்ன முகமது உசேனின் வாரிசகள் பழனி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.308/1996 என்ற பாகப்பிரிவினை வழக்கு தாவா சொத்து மற்றும் இதர குடும்பச் சொத்துகள் தொடர்பாக தொடுத்து அதில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு , அதன்பேரில் நிறைவேற்று மனு எண் .64/2004 தொடுத்து அதில் தாவா சொத்தானது அப்துல் அஜிஸ்க்கு டெலிவரியின் அடிப்படைடியில்2008 ல் நீதிமன்றத்தால் ஒப்படைக்கப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை.

மேற்சொன்ன தீர்ப்பின் அடிப்படையில் அப்துல் அஜிஸ்க்கு வருவாய்த்துறையால் தாவா சொத்து தொடர்பாக பட்டா (பட்டா எண்.686) வழங்கப்பட்டது என்றால் அவர்களாக வாங்கிக்கொண்டார்கள். மேற்சொன்ன பட்டாவின் அடிப்படையில் அப்துல் அஜிஸ் அவரது மனைவி பௌசிகா பேகம் மகன் சிக்கந்தர் ரியாஸ் ஆகியோர் தாவா சொத்தை 15.04.2009 ம் தேதி ஆவண எண்.243/2009 என்ற ஆவணத்தின் அடிப்படையில் வாதி கணேஷனுக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் அது

தவறாகும், நான் 2008 ல் வழக்கு தொடுத்துவிட்டேன். நான் தொடுத்த வழக்கின் எண் எனக்கு நினைவில்லை . நான் தாக்கல் செய்த வழக்கின் எண் .209/2008 என்றால் சரிதான் . அசல் வழக்கு எண்.209/2008 என்ற வழக்கில் பழைய சர்வே எண்.22, அதன் புதிய சர்வே எண் .103/17 என்று தாக்கல் செய்தேன் . நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் , அசல் வழக்கு 209/2008 ல் தாவா சொத்தாக சர்வே எண் .100/4 ஐ மட்டும் தான் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

2012 ல் அசல் வழக்கு எண் .209/2008 ல் தாவா சொத்தின் சர்வே எண்ணை 100/4 ல் இருந்து திருத்தல் மனுவின் அடிப்படையில் சர்வே எண் .103/17 ஆக திருத்தம் மேற்கொண்டேன் என்றால் சரியல்ல ( சாட்சி வழக்கறிஞரைப் பார்த்து பிறகு நான் திருத்தம் மேற்கொண்டேன் என்று மாற்றி சாட்சியம் அளித்தார் ). இன்றைய தேதிவரை சர்வே எண் .103/17 உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.103/17B என பட்டா எண்.747 என்று வாதி கணேஷன் பெயரில் உள்ளது என்றால் சரிதான் . 2009 காலகட்டத்தில் சர்வே எண்.103/17B உட்பிரிவானது மேற்கொள்ளபட்டது என்றால் எந்த வருடம் மாற்றப்பட்டது என்று எனக்குத் தெரியாது . 2009 காலகட்டம் முதல் சர்வே எண் . 103/17B தொடர்பாக வாதி கணேஷன் தான் வரி செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல , நானும் வரி செலுத்தி வருகிறேன். நான் எத்தனை சென்ட் நிலத்திற்கு வரி செலுத்திகிறேன் என்றால் 11 சென்ட் நிலத்திற்கு வரி செலுத்துகிறேன். என்ன சர்வே எண்ணுக்கு வரி செலுத்துகிறேன் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியவில்லை. யார் பெயரில் உள்ள பட்டாவிற்கு நான் வரி செலுத்தி வருகிறேன் என்றால் என் பெயரில் உள்ள பட்டாவிற்கு தான் வரி செலுத்தி வருகிறேன்.

தாவா சொத்து சம்பந்தமாக என் பெயரில் பட்டா உள்ளது என்றால் பட்டா உள்ளது . என் பெயரில் உள்ள பட்டாவையும் , வரி இரசீதுகளையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை . என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தான் நான் தாக்கல் செய்த ஆவணங்கள் என்றால் சரிதான். அதில் என் பெயரில் உள்ள பட்டாவோ, வரி இரசீதோ தாக்கல்

செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை . என் பெயரில் பட்டாவோ, வரி ஆவணங்களோ இல்லை என்றாலும், அதனால்தான் அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, என்னிடம் உள்ளது. தாவா சொத்தில் வாதி கணேஷன் விவசாயம் செய்கிறார் என்ற விபரம் மட்டும் தெரியும், ஆனால் என்ன பயிரிட்டுள்ளார் என்ற விபரம் தெரியாது. வாதி தாவா சொத்தை 17 வருடங்களாக விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் நான்தான் விவசாயம் செய்து வருகிறேன்.

தாவா சொத்தை நான் வருடம் வருடம் பார்வையிட்டு வருகிறேன். வாதி எத்தனை வருடங்களாக விவசாயம் செய்கிறார் என்றால் அவர் வருடம் வருடம் விவசாயம் செய்கிறார் , வாதி சொத்தை வாங்கியதில் இருந்து விவசாயம் செய்கிறார் . 17 வருடங்களாக வாதி விவசாயம் செய்கிறார் என்றால் நான் வாங்கிய பிறகு தான் விவசாயம் செய்து வருகிறார் . நான் தாவா சொத்தை வாங்கியது சம்பந்தமாக எந்தவொரு கிரைய ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கிரைய ஆவணம் பி .வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2, சர்வே எண்.100/4 தொடர்புடைய ஆவணம் என்றால் நான் தவறான எண் போட்டு கிரையம் வாங்கியுள்ளேன் . தவறாக கிரையம் வாங்கியது தொடர்பாக திருத்தல் ஆவணம் போடப்பட்டுள்ளது என்றால் போடப்பட்டுள்ளது . திருத்தல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பில் அந்த திருத்தல் எந்த ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனது வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும் . அசல் வழக்கு எண்.209/2008 ல் நான் சர்வே எண் . 100/4 ஐ, இடைக்கால மனு எண்.278/2012 என்ற மனுவை எந்தவிதமான அடிப்படை ஆவணங்களும் இல்லாமல் தாக்கல் செய்து எதிர் தரப்பினர் தோன்றா தரப்பினராக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல . அசல் வழக்கு எண் .209/2008 போலியாக உண்மை மறைத்து பெறப்பட்ட தீர்ப்பை எதிர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அசல் வழக்கு 209/2008 உண்மையை மறைத்து பெறப்பட்ட தீர்ப்பு அல்ல.

என் தாயார் பெயரில் இருந்து சர்வே எண் .100/4 எனக்கு கிடைக்கப்பெற்றது என்று காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் . என்னிடம் காட்டப்படும் என் தரப்பு ஆவணங்களில் எந்த ஆவணம் எனது தாயார், சர்வே எண்.100/4 ஐ எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் அந்த ஆவணம் நான் குறியீடு செய்த ஆவணங்களில் எதுவும் இல்லை, என் தாயார் வாய்க்காரலாகத்தான் சொத்தைக் கொடுத்தார் . சர்வே எண்.100/4 ஐ, கந்தையா மணிநாதனுக்கு 1993 ல் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் . கந்தையாவிற்கு சர்வே எண்.103/17 ஐ கிரையம் கொடுப்பதற்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்றால் சரியல்ல . சர்வே எண்.103/17 தொடர்பாக நான் எந்தவொரு மூல ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்காகத்தான் இந்த வழக்கை நான்குமால்படி சர்வே எண் .103/17 என்று சரியான எண் போட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல . நான் வந்து சரியான எண் போட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் . எனக்கு நான்குமால்படி தீர்ப்பாக வேண்டும்.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.18 17:46:43 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.